

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி


Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 124 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 28 – வியாழக்கிழமை 14 டிசம்பர் 2023 – சென்னை 12+8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 124: Thiruvalluvar Year - 2054 - Karthigai 28 - Thursday 14 December 2023 - Chennai 12+8 Pages ₹ 5.00


# பொங்குற்ற சிங்கங்கள் எங்குற்றனவோ!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.24 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

நமது கழகத்தின் இளங் கண்மணிகளாம் இளைஞர்களின் எழுச்சி மிகு நெல்லை மாநாடு பற்றி எழுதத் தொடங்கி, நெல்லை மாவட்டத்தின் சிறப்புகளையும் - கழக ஆட்சியில் அந்த மாவட்டம் பெற்று வரும் வளங்களையும் - இளைஞர் முதல் மூத்தோர் வரையில் - அங்கிருந்தோர் - இன்னும் இருப்போர் - கண்ட களங்களையும் பற்றி விரிவாக எழுதி வருகிறேன். அதன் தொடர்ச்சியை விட்டு விடாமல் மீண்டும் தொடருகிறேன்.

இப்போது மணி என்ன தெரியுமா?

இரவு; விடியலை நாடி நகருகிறது - ஆம்; விடியற்காலை மூன்றரை மணி - அடடே; நான்கு மணிக்கு எழுதத் தொடங்கினால்தானே நாளைய "உடன்பிறப்பு" கடிதத்தை எழுதி முடிக்க முடியும் - அப்படியேன் கண் விழித்து எழுத வேண்டும், நீ கடிந்து கொள்வது எனக்குப் புரிகிறது - ஆனால் ஒன்று; இப்படி நமது அண்ணா நினைத்து விடிய விடிய விழித்திருந்து நமக்கு "காஞ்சி" இதழிலோ அல்லது "திராவிட நாடு" இதழிலோ "தம்பி" என அழைத்து எழுதாமல் இருந்திருப்பாரேயானால் நம் கண்களையும், நாட்டு மக்கள் பலரின் கண்களையும் திறந்திருக்க முடியுமா?

ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றான "அண்ணா வழியில் அயராது உழைப்போம்" என்ற நமது முழக்கத்திற்கு அண்ணாவைப் போல அறிவுத் தெளிவு பெற்றவர்களாவோம் என்றோ; அவரைப் போல சிந்தனைப் பெருங் கடலாக விளங்குவோமென்றோ; அவரைப் போல எழுத்து வேந்தராகவோ அல்லது எண்ணங்களின் சுரங்கமாகவோ திகழ்வோமென்றோ; அறிவுச் சிகரமாக உயர்ந்து நிற்போமென்றோ - நாமே கற்பனை செய்து கொள்ளவில்லை. அண்ணா வழியில் அயராது உழைத்திட என்னால் முடிந்ததெல்லாம், அவரைப் போலக் கை வலிக்க வலிக்க விடியுமட்டும் - கண் எரிய எரிய உன் போன்ற உண்மை உடன்பிறப்புக்களுக்கு - ஓய்வுக்கே ஓய்வளித்து விட்டு இப்படி எழுதிக் கொண்டிருப்பது உட்பட; என்றென்றும் உழைத்துக் கொண்டிருப்பது, அந்த ஊக்கமும் உற்சாகமும் உதயமாகட்டும் என்பதற்காகத்தான் எனும் உண்மையை நீ அறிய மாட்டாயா?

நேற்றைய கடிதத்தில் - புதுப்பிக்கப்பட்ட நெற்கட்டும் செவல் பூலித்தேவனின் புகழ் ஏடு படித்து முடித்து விட்டு, அந்தப் பொங்குற்ற சிங்கம் எங்குற்றான் எனத் தெரியாமலே மறைந்து விட்ட சோக வரலாறு நிறைவடையாத நிலையில்தான்; ஜெகவீரபாண்டியனார் தீட்டியுள்ள பாஞ்சாலங்குறிச்சி வரலாற்றுக் காவியத்திலும், வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரை என்ற பெருவீரன் மாற்றாருடன் மோதி மரணமடையவில்லை - எங்கு சென்றார் என்ற மர்ம முடிச்சும் இன்னும் அவிழ்க்கப்படவில்லை. இப்படியொரு முடிவில்லாத முடிவை "He had escaped by miracle" ("அவன் மாயமாய் மறைந்து போயிருக்கிறான்") என்ற வாசகத்தின் வடிவில் ஜெகவீர பாண்டியனார் தீட்டிக் காட்டுகிறார்.

சிதைக்கப்பட்டது அந்தச் சிங்கங்களின் வரலாறு மட்டுமல்ல; அவர்கள் கட்டி வாழ்ந்த கோட்டை கொத்தளங்களும் கலனாகி விட்டன. கட்டபொம்மன் என்ற சுதந்திர சின்னத்தின் அடையாளம் கூடத் தெரியாத அளவுக்கு அவர் கோலோச்சிய பாஞ்சாலங்குறிச்சியை பகை உணர்வு முற்றியதின் காரணமாக பாழ்படுத்திப் போட்டது பரங்கியர் வெறித்தனம்! அங்கு மிச்சம் நின்றது கட்டபொம்மனின் கழுத்தை இறுக்கிய தூக்குக் கயிறு தொங்க விடப்பட்டிருந்த அந்த மரக்கிளை மட்டும்தான்.

அந்தச் சோகச் சூழலைக் காணவும் - கண்டால் - ஏதேனும் நினைவுகளை நிழலாட விட முடியுமா? அதற்குக் கழக அரசு கடமையாற்றிட முன் வருமா என்று சட்டமன்றத்தில் இருந்த இரண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் சிந்தித்தார்கள்.

## கலைஞர் கடிதம்

செயல்படவும் தொடங்கினார்கள். அவர்களில் ஒருவர் அந்தக் கட்சியின் மூத்த முன்னோடிகளில் ஒருவர். இளம் பிராயம் தொட்டே தியாக வேள்வியில் வளர்ந்த தீரர், மணலி கந்தசாமி - மற்றொருவர் இளைஞர், சண்டமாருதப் பேச்சாளர், தம்பி க. சுப்பு. இருவரும் தியாகச் சுடர்களாக ஒளி விட்டவர்கள். விபரம் யாதொன்றும் தெரியாது, அப்போது அவர்கள் கட்சித் தலைமையிலிருந்து வேறுபட்ட கருத் தோட்டத்தின் விளைவு, இருவரும் என்னை பாஞ்சாலங்குறிச்சிக்கு அழைத்தனர், என் வருகையை முன்னிட்டு விழாவும் அந்த மண்ணில் விமரிசையாக ஏற்பாடு செய்திருந்தனர்.

பாஞ்சாலங்குறிச்சி விழாவுக்கு என்னை அவர்கள் அழைத்த நோக்கம் - மணலியார்; மற்றும் தம்பி சுப்பு ஆகியோரின் வரவேற்புரையிலேயே விளங்கிவிட்டது.

* விழாவில் அன்றைக்கு ஆற்றப்பெற்ற விரிவுரைகளை கவனித்தாலே நோக்கம் புரியும். அங்கு சிதறியும் பதறியும் கிடக்கும் கட்டபொம்மன் வழித் தோன்றல்களைக் காத்திட வேண்டும்.

* பாழ்பட்டுப் போய் பூமியில் பதுங்கிக் கிடக்கும் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை புதுப்பிக்கவேண்டும்.

* தென் பாண்டி தீரன் கட்டபொம்மன், வீரன் சுந்தரலிங்கம் நினைவு போற்றிட வழி காண வேண்டும்.

* அவர்கள் வழித் தோன்றல்களுக்கு வசிக்க வீடும், வாழ்வதற்கு வழியும் காட்டப்பட வேண்டும்.

ஆம், அதை வெளிப்படையாகக் கோடிட்டுக் காட்டாமலே மணலியாரும் சுப்புவும் எனக்குப் புரியும் விதமாகப் பேசினார்கள்.

இதோ 1973 மே 12ஆம் நாள் நடந்த அந்த வரவேற்பு விழாவில் - தம்பி சுப்பு பேசியது வருமாறு:-

"பின்தங்கிய மக்களுக்கு நெஞ்சுரத்தோடு பாடுபடக் கூடிய தலைவர் ஒருவர் உண்டென்றால் அது நமது முதல்வர் கலைஞர் தான். அரசியலில் வேறு கட்சி என்ற வேறுபாடு இருந்தாலும் இந்தஉண்மையை ஒப்புக் கொள்வதில் நான் வெட்கப்படத் தேவையில்லை. கட்டபொம்மன் விழா எடுக்கும் இந்த நேரத்தில் கட்டபொம்மன் இப்போது இல்லை என்கிறார்கள்; அதை நான் நம்ப மாட்டேன். அந்தக் கட்டபொம்மன்தான் இங்கே கலைஞராக வீற்றிருக்கிற காட்சியைக் காண்கிறேன்"

அடுத்து, உரையாற்றிய மணலி கந்தசாமி அவர்கள், "முதல்வர் கலைஞரின் ஆட்சிக் காலம் ஏழைகள் வாழ்வு பெறும் பொற்காலம். தமிழகத்தில் அவருடைய ஆட்சிக் காலத்தில்தான் ஏழைகள் வாழ்வு பெற முடியும். இங்கே எதிரே கூடியிருக்கும் லட்சக்கணக்கான மக்கள் கலைஞர் இடத்தில் எதையோ எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் எதை எதிர்பார்க்கிறார்கள் என்பது முதல்வருக்குத் தெரியும்" என்றார்.

இந்த உரைகள் இப்போதல்ல; 34 ஆண்டுகளுக்கு முன்பு இதே நெல்லைச் சீமையில் பெரியவர் மணலி அவர்களும், தம்பி க. சுப்புவும் ஆற்றிய உரை. அன்று நடைபெற்ற நிகழ்ச்சியிலே தான் பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டை எழுப்பப்படும் என்று அறிவித்தேன். கட்டபொம்மன் வாரிசுதாரர்களுக்கான ஓய்வூதியத் தொகையையும் உயர்த்தினேன்.

அந்த விழாவில் நான் உரையாற்றும்போது குறிப்பிட்ட சில பகுதிகள் வருமாறு :

"பாஞ்சாலங்குறிச்சி - இந்திய நாட்டு விடுதலைக்காக சுதந்திரப் போராட்டத்தில் வெள்ளை


தொடர்ச்சி 4 ஆம் பக்கம்


---

பா.ஜ.க. எம்.பி.யிடம் பரிந்துரைக் கடிதம் பெற்று வந்து

# நாடாளுமன்றத்தில் அத்துமீறி நுழைந்து கண்ணீர் புகைகுண்டு வீச்சு!

## 22 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் சம்பவம்: 4 பேர் கைது!

புதுடெல்லி, டிச. 14–

இந்திய நாடாளுமன்றம் மீதான தாக்குதல் நடந்து 22 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், அதே நாளில் மற்றும் ஒரு அசம்பாவிதம் நாடாளுமன்றத்தில் நடந்துள்ளது.

மக்களவையில் நேற்று அலுவல்கள் நடந்து கொண்டிருந்த போது பார்வையாளர் மாடத்தில் அமர்ந்திருந்த 2 இளைஞர்கள் திடீரென தடுப்புகளை தாண்டி அவைக்குள் குதித்தனர். எம்.பி.க்கள் அமர்ந்திருந்த சேர் மற்றும் டேபிள்கள் மீது தாவிச் சென்ற அவர்கள் மர்மப் பொருட்களை வீசியெறிந்தனர். அதில் இருந்து வாயு வெளியேறியது. அந்த இளைஞர்கள் இருவரையும் எம்.பி.க்களே சுற்றி வளைத்துப் பிடித்து பாதுகாவலர்களிடம் ஒப்படைத்தனர்.

இதையடுத்து, நாடாளுமன்றமே பரபரப்பானது. மக்களவை உடனடியாக ஒத்திவைக்கப்படுவதாக அவைத்தலைவர் அறிவித்தார்.

மக்களவையில் நடந்த அதிர்ச்சி சம்பவம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய மக்களவை காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி,

**2 பேரும் உள்ளே நுழைந்தது எப்படி?**

"பார்வையாளர் பகுதியில் இருந்து 2 இளைஞர்கள் திடீரென குதித்து உள்ளே வந்தனர். அவர்கள் ஏதோ ஒன்றை வீசினர். அதில் இருந்து வாயு வெளியேறியது. அவர்கள் இருவரையும் எம்.பி.க்களே வளைத்துப் பிடித்தனர்.

பின்னர் அவர்களை, பாதுகாப்புப் படையினர் வெளியே கொண்டு வந்தனர். சபை மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. இது நிச்சயமாக ஒரு பாதுகாப்பு அத்துமீறலாகும், ஏனென்றால் 2001ம் ஆண்டில் நடத்தப்பட்ட நாடாமன்றத் தாக்குதலில் தங்கள் இன்னுயிர்களை தியாகம் செய்தவர்களின் நினைவு தினத்தை இன்று அனுசரிக்கிறோம்" என்று அவர் கூறினார்.

**என்ன நடந்தது? சு.வெங்கடேசன் விளக்கம்!**

இதுகுறித்து பி.பி.சி. தமிழிடம் பேசிய மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன்,

"பார்வையாளர்கள் மாடத்தில் இருந்து முதலில் ஒருவர் தாவினார். அவர் தவறிவிழுந்துவிட்டதாகதான் முதலில் நினைத்தோம். ஆனால், அவர் எழுந்து வேகமாக நாற்காலிகளுக்கு நடுவில் ஏறி குதித்து ஓடினார். மற்றொரு நபர் அவையில் குதித்த பிறகுதான், இரண்டு பேர் குதித்து உள்ளே வந்திருக்கின்றனர் என்பது புரிந்தது. அவர்களை பிடிப்பதற்கு முன்பாக ஷூவில் இருந்து கேஸை எடுத்து அடிக்க ஆரம்பித்து விட்டனர். அவையில் காவலர்கள் யாரும் இல்லை. ஊழியர்கள் மட்டுமே இருந்தனர். அவர்களும் அச்சத்தில்தான் இருந்தனர். 15 நிமிடங்களுக்கு பிறகு காவலர்கள் உள்ளே வந்தனர். இது முழுக்க பாதுகாப்பு குறைபாடுதான்" என்றார்.


தொடர்ச்சி 4 ஆம் பக்கம்


---

உரிய விசாரணை மேற்கொண்டு பொறுப்பானவர்களைக் கண்டறிந்து

# நாடாளுமன்றப் பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, டிச. 14 –

நாடாளுமன்ற மக்களவையில் பாதுகாப்பு மீறல் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில், இது தொடர்பாக உரிய விசாரணை மேற்கொண்டு, பொறுப்பானவர்களைக் கண்டறிந்து நாடாளுமன்றப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**முன்னெப்போதும் இல்லாத வகையில் நாடாளுமன்ற மக்களவைக்குள்ளேயே அரங்கேறியுள்ள பாதுகாப்பு மீறல் நமது மக்களாட்சியின் உயரிய கோயிலான நாடாளுமன்றத்துக்கும் பெரும் அச்சுறுத்தலை உண்டாக்கியிருக்கிறது.**

**இதில் தாமதமில்லாத உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உரிய விசாரணை மேற்கொண்டு, இதற்குப் பொறுப்பானவர்களைக் கண்டறிந்து, இனி இப்படி நடக்காத அளவுக்குப் பாதுகாப்பு நடைமுறைகளைச் செயல்படுத்தி, மக்களாட்சியின் மிக முக்கியமான அமைப்பான நாடாளுமன்றத்தின் பாதுகாப்பை நம்மிடம் உள்ள அனைத்து வலிமையையும் கொண்டு உறுதி செய்திட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.